**ப.து.ந.க.எண் /1681/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2008 நாளிட்ட குறிப்பு**

## 30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :650/2008 பொருள் எண்.50

### மதிப்பீடு மற்றும் ஒப்புதல் வழங்குதல் திருத்திய அதிகாரப் பகிர்வு வழங்குதல்

தமிழ்நாடு ஒளிவு மறைவில்லா ஒப்பந்தப்புள்ளி விதி 1998, பிரிவு 7(2)–ல், ஒப்பம் ஏற்கும் அதிகாரம் ஆணையாளர் அவர்களுக்கு உள்ளது. சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி 1919–ல் பிரிவு 16(2) ன் கீழ் ஒப்பம் முடிவு செய்யும் அதிகாரம், சென்னை மாநகராட்சி பொறியாளருக்கு வழங்கப்பட்டு, அதற்கு மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது. கீழ்கண்டவாறு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பதவி / அதிகார அமைப்பு | ஒப்பம் ஏற்பதற்கான அதிகார வரம்பு |
|---|---|---|
| 1 | செயற்பொறியாளர்(மண்டலம்/துறை) கோட்ட மின் பொறியாளர் | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 2 | மண்டல அலுவலர் | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.15 லட்சம் வரை( அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 3 | கண்காணிப்பு பொறியாளர் / நகரப் பொறியாளர் | ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 4 | தலைமை பொறியாளர் (பொது) தலைமை பொறியாளர் (கட்டிடம் மற்றும் பாலங்கள்) | ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.30 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 5 | <u>ஒப்பங்கள் ஏற்கும் குழுமம் உறுப்பினர்கள்:</u> தலைமை பொறியாளர் (பொது) தலைமை பொறியாளர்(கட்டிடம் மற்றும் பாலங்கள்), நிதி ஆலோசகர், ஆணையாளர் அவர்களால் அவ்வப்போது நியமிக்கப் படும் இரண்டு கண்காணிப்பு பொறியாளர்கள் | ரூ.35 லட்சம் வரை (எல்லையற்ற ஒப்ப கூடுதல்) |

தற்போது தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 6/2008–ல் ஆணையாளர், அவர்களுக்கு பத்து லட்சத்திற்கு மேலும், ஐம்பது லட்சத்திற்கு மிகாமலும் ஒப்பங்கள் வழங்க அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே மேலே குறிப்பிட்டுள்ள அதிகாரத்திற்கு ஏற்ப, சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்ட விதி, பிரிவு–16 (2) – ன் கீழ் ஆணையாளர் அவர்களால் கீழ் கண்டவாறு ஒப்பம் முடிவு செய்யும் அதிகாரம் சென்னை மாநகராட்சி பொறியாளருக்கு திருத்தி வழங்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | பதவி / அதிகார அமைப்பு | ஒப்பம் ஏற்பதற்கான அதிகார வரம்பு | |
|---|---|---|---|
| | | ஏற்கனவே இருக்கும் அதிகாரம் | திருத்தி வழங்கப்படும் அதிகாரம் |
| 1 | செயற்பொறியாளர் (மண்டலம்/துறை) கோட்ட மின் பொறியாளர் | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) | –– |
| 2 | மண்டல அலுவலர் | ரூ.10 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) | ரூ.10 லட்சத்திற்கு மேல் 15 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |

| | | | |
|---|---|---|---|
| 3 | கண்காணிப்பு பொறியாளர் / நகரப் பொறியாளர் | ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) | ரூ.15 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 4 | தலைமைபொறியாளர் (பொது) தலைமை பொறியாளர் (கட்டிடம் மற்றும் பாலங்கள்) | ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.30 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) | ரூ.25 லட்சம் வரை (அதிக பட்சம் 6% கூடுதல்) ரூ.30 லட்சம் வரை (அதிக பட்சம் 3% கூடுதல்) |
| 5 | <u>ஒப்பங்கள் ஏற்கும் குழுமம் உறுப்பினர்கள்:</u> தலைமை பொறியாளர் (பொது) தலைமை பொறியாளர்(கட்டிடம் மற்றும் பாலங்கள்), நிதி ஆலோசகர், ஆணையாளர் அவர்களால் அவ்வப்போது நியமிக்கப்படும் இரண்டு கண்காணிப்பு பொறியாளர்கள் | ரூ.35 லட்சம் வரை (எல்லையற்ற ஒப்ப கூடுதல்) | ரூ.50 லட்சம் வரை ( எல்லையற்ற ஒப்ப கூடுதல்) |

மேற்கண்ட விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) –வின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“17.12.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண். 328/08 , நாள்: 17.12.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது ”.

19.12.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.307/2008 நாள்:19.12.2008–ன்படி இதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கின்றது. “

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ப.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.க.கு.ந.க.எண்.அ8/8043/2008**
**ஆணையாளரின் 27/11/2008 நாளிட்ட குறிப்பு.**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :651/2008 பொருள் எண்.51

**அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி**

13.11.2008 நாளிட்ட நிதி (படிகள் ) துறை அரசாணை எண். 491ல், ஜீலை 2008 முதல் அகவிலைப்படி 47 விழுக்காடிலிருந்து 54 விழுக்காடுகள் உயர்த்தி வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வரசாணையில் 01.07.2008 முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படியை ரொக்கமாக வழங்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு சமர்ப்பிப்பது யாதெனில், அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படியை அரசாணையின் பிற்சேர்க்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும் எனவும், அட்டவணை கலம்–1ல் குறிப்பிட்டுள்ள அடிப்படை ஊதியத்தில் அல்லாதவர்களுக்கு அரசு அறிவித்த 54 விழுக்காடுக்கு கணக்கிட்டு வழங்கப்படல் வேண்டும்.

இவ்வரசாணையில், ஏற்கனவே அகவிலைப்படி பெறும் சில்லறை செலவினத்திய குறிப்பட்ட மாத சம்பளம் பெறும் முழுநேர பணியாளர்களுக்கு பொருந்தும் மற்றும் பகுதி நேர பணியாளர்களுக்கு பொருந்தாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அகவிலைப்படி உயர்த்தப்பட்டு வெளியிடப்பட்ட இவ்வரசாணை மான்யம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும் ஆசிரியர் அல்லாத பிற பணியாளர்களுக்கும் உள்ளாட்சி மன்றங்களின் பணியாளர்களுக்கும் பல்கலைகழக மான்ய குழு / அனைத்து இந்திய தொழிற் நுட்ப கல்வி குழு சம்பள விகிதங்களின் கீழ்வரும் பணியாளர்களுக்கும் அரசு மற்றும் மான்யம் பெறும் பல் தொழில் பயிற்சி பள்ளிகள், சிறப்பு பட்டயப்படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோர்க்கும் வருவாய் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், மதிய உணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவி செய்பவர்கள், சிறுவர் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழுள்ள கிராம பஞ்சாயத்துகளில் பணிபுரியும் உதவியாளர்கள்/எழுத்தர்களுக்கும் பொருந்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அகவிலைப்படியினால் சென்னை மாநகராட்சிக்கு ஆண்டொன்றுக்கு ஆகும் கூடுதல் செலவீனம் ரூ.14.68 கோடியாகும் எனவும் நடப்பு நிதியாண்டில் ரூ.8.81 கோடி கூடுதல் செலவினம் ஏற்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால், இவ்வராசாணை சென்னை மாநகராட்சியில், மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு நடைமுறைப்படுத்த, ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

எனவே, அரசாணை எண்.491, நிதி (படிகள்) துறை நாள் 13.11.2008னை நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு சென்னை மாநகராட்சியில் 01.07.2008 முதல் நடைமுறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

19.12.2008 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டத்தில் தீர்மான எண்.298/2008 நாள்: 19.12.2008–ன்படி இதனை நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.க.கு.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**ம.அ2.ந.க.எண்.சி3/199/2008**
**ஆணையாளர் அவர்களின் 19.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :652/2008 பொருள் எண்.52

**வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

திரு.கே.திருநாவுக்கரசு, முதுநிலை பூச்சியியலர், மண்டலம்–2, அவர்கள் சென்னை மாநகராட்சி பணித்துறையில் 08.05.1970 அன்று (Boy Thozhilali) பாய் தொழிலாளியாக பணியில் சேர்ந்து 24.03.1977 முதல் இளநிலை உதவியாளராகவும், 02.04.1980 நாள் முதல் பூச்சியியல் உதவியாளராகவும், பின்னர் 26.12.2003 நாள் முதல் முதுநிலை பூச்சியிலராக பதவி உயர்வு பெற்று முதுநிலை பூச்சியியலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டு பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தனியர் கடந்த 31.10.2008 அன்று மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதி வழங்கப்பட்டது.

01. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இல்லை என சான்று பெறப்பட்டுள்ளது.
02. இவர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை.
03. விழிப்பு அலுவலரின் 24.09.2008 தேதியிட்ட குறிப்பில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்.
04. இவரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடைகள் ஏதும் நிலுவையில் இல்லை.
05. இவர் மீது நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் ஏதும் நிலுவையில் இல்லை.
06. இவருக்கு சென்னை மாநகராட்சி குடியிறுப்பு ஏதும் ஒதுக்கப்படவில்லை.

எனவே, திரு.கே.திருநாவுக்கரசு, முதுநிலை பூச்சியியலர், மண்டலம்–2, சுகாதாரத்துறை என்பவர் சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வரும் அலுவலரானதால் நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்டகால முன் பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி இவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கிற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் 31.10.2008 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.2.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :653/2008 பொருள் எண்.53

**ஓய்வூதியம்**

திரு.எம்.ஸ்ரீராமலு, உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்கள் பணியிலிருந்து 30.04.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 39 வருடங்கள் 09 மாதங்கள் 06 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3138/எ4/2008, நாள்.23.10.2008 சான்றின்படி 01.05.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.6,207/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,01,076/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,069/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,59,701/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.எஸ்.வத்சலா, அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,207/– 11.04.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 12.04.2015 முதல் ரூ. 3,724/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.எம்.ஸ்ரீராமலு, உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்களுக்கு 01.05.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.6,207/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,01,076/–ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.75,269/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,25,807/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,069/– (ரூபாய் இரண்டாயிரத்து அறுபத்தி ஒன்பது மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,59,701/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஒன்பதாயிரத்து ஏழுநூற்று ஒன்று மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.6,207/–லிருந்து ரூ.4,138/–ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி2/35948/2008**
**ஆணையாளர் அவர்களின் 17.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :654/2008 பொருள் எண். 54

**ஒய்வூதியம்**

திரு.ஏ.பாலசுப்பிரமணியன், மேற்பார்வை பொறியாளர், பணித் துறை, அவர்கள் வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 31.05.2007 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அன்னாருக்கு செயல்முறை ஆணை, பொ.து,.ந.க.எண்.பி2/23790/2007, நாள் 12.2.2008ன் மூலம் ஓய்வூதியப்பயன்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. தற்போது துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை கடிதம் நி.மு.எண்.3130/எ4/2008, நாள். 15.10.2008ல் கீழ்கண்டவாறு திருத்திய ஓய்வூதியப் பயன்கள் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

| | ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் 01.06.2007 முதல் | ரூ.10,182/– |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | மாற்றம் இல்லை |
| தொகுப்பு | ரூ.3,394/– |
| தொகுப்பு தொகை | ரூ.4,26,015/– |
| குடும்ப ஓய்வூதியம் ( மனைவி திருமதி பா.சந்திரவதனா) | ரூ.10,182/– (11.5.2014 முடிய) ரூ.6,109/– (12.5.2014 முதல்) |

தனியர் சென்னை மாநகராட்சி 1(பி) வகுப்பு அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஏ.பாலசுப்பிரமணியன், மேற்பார்வை பொறியாளர், பணித் துறை, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக 1.6.2007 முதல் ரூ.10,182/–ஐ ஏற்கனவே, வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.9,507/–லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,394/–ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.4,26,015/– (ரூபாய் நான்கு லட்சத்து இருபத்தி ஆறாயிரத்து பதினைந்து மட்டும்)ல் ஏற்கனவே, வழங்கப்பட்ட தொகை ரூ.3,97,773/–ஐ நேர்செய்து மீதம் ரூ.28,242/– வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.10,182/–லிருந்து ரூ.6,788/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது மனைவி திருமதி பா.சந்திரவதனா அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.10,182/–ஐ 11.5.2014 முடியவும், அதன் பின்னர் 12.5.2014 முதல் ரூ.6,109/– வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி4/36436/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 12.12.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :655/2008 பொருள் எண்.55

<u>ஓய்வூதியம்</u>

திரு.எம்.நாமதேவ், வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 35 வருடங்கள் 03 மாதங்கள் 24 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3433/எ4/2008, நாள்.14.11.2008 சான்றின்படி 01.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,282/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,094/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,88,359/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.சி.சாந்தா, அவர்கள் உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,282/– 09.05.2015 வரையிலும், சாதாரண குடும்ப ஓய்வூதியம் 10.05.2015 முதல் ரூ. 5,569/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி பணியமைப்பில்–1 ''அ'' பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.எம்.நாமதேவ், வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்களுக்கு 01.06.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,282/–ம் இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,094/– (ரூபாய் மூவாயிரத்து தொன்னூற்று நான்கு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,88,359/– (ரூபாய் மூன்று லட்சத்து எண்பத்தி எட்டாயிரத்து முன்னூற்று ஐம்பத்தி ஒன்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,282/–லிருந்து ரூ.6,188/–ஆக குறைத்து வழங்கவும், ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.சி.சாந்தா, அவர்களுக்கு உயர்த்தப்பட்ட குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,282/– 09.05.2015 வரையிலும் சாதாரண குடும்ப ஓய்வூதியம் 10.05.2015 முதல் ரூ.5,569/– வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/35951/2008
ஆணையாளர் அவர்களின் 17.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :656/2008 பொருள் எண். 56

## ஓய்வூதியம்

திரு.ஆர். தண்டபாணி, உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 35 வருடங்கள் 08 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3135/எ4/2008, நாள்.15.10.2008 சான்றின்படி 01.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.6,619/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,21,090/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,206/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,76,898/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.டி.சுகுணா, அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,619/– 21.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 22.05.2015 முதல் ரூ. 3,972/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.ஆர். தண்டபாணி, உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்களுக்கு 01.06.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.6,619/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,21,090/–ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.80,273/– பிடித்தம் செய்து மீதத் தொகையான ரூ.2,40,817/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,206/– (ரூபாய் இரண்டாயிரத்து இருநூற்று ஆறு மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,76,898/– (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தி ஆறாயிரத்து எண்ணூற்று தொன்னூற்று எட்டு மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.6,619/–லிருந்து ரூ.4,413/–ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி4/35953/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 15.11.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :657/2008 பொருள் எண்.57

<u>ஓய்வூதியம்</u>

திரு.டி.தயாள், செயற்பொறியாளர், கட்டிடத்துறை, அவர்கள் வயது முதிர்வு காரணமாக 31.05.2005 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். அன்னாருக்கு தற்காலிக ஓய்வூதியமாக ரூ.4429/—ம் தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.2,39,568/—ம் வழங்கப்பட்டது.

மேற்பார்வை பொறியாளர் (கட்டிடம்) அவர்களின் குறிப்பு, க.து.ந.க.எண்.இ1/201/2008, நாள்.10.10.2008ல் அன்னாருக்கு ஏற்கனவே, உதவி செயற்பொறியாளர், பதவியில் சிறப்பு நிலை ஊதியத்தில் தற்காலிக ஓய்வூதியப்பயன்கள் வழங்கப்பட்டதாகவும், தற்போது செயற்பொறியாளர் பதவியில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டதின் அடிப்படையில், திருத்திய தற்காலிக ஓய்வூதியம் ரூ.4,847/—ம் திருத்திய தற்காலிக பணிக்கொடைத் தொகை ரூ.2,54,364/—ம் வழங்க கணக்கு அலுவலர் (கட்டிடம்) அவர்களால் அளிக்கப்பட்டுள்ள கணக்கீட்டுத் தாளின்படி வழங்க கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை, கடிதம் ஓ.மு.எண்.2476/எ4/2008, நாள்.11.08.2008ல் அன்னாருக்கு திருத்திய தற்காலிக ஓய்வூதியம் வழங்குவது குறித்து நிர்வாகமே முடிவு செய்துக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, இதனடிப்படையில், திரு.டி.தயாள், ஓய்வு பெற்ற செயற்பொறியாளர், கட்டிடத்துறை, அவர்களுக்கு திருத்திய தற்காலிக ஓய்வூதியம் ரூ.4847/— (ரூபாய் நான்காயிரத்து எண்ணூற்று நாற்பத்தி ஏழு மட்டும்) திருத்திய பணிக்கொடைத் தொகை ரூ.2,54,364/— (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து முன்னூற்று அறுபத்தி நான்கு மட்டும்)ல் ஏற்கனவே வழங்கப்பட்ட தற்காலிக ஓய்வூதியம் மற்றும் தற்காலிக பணிக்கொடையினை நேர்செய்து மீதம் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.பி4/36144/2008**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :658/2008 பொருள் எண்.58

**ஓய்வூதியம்**

திரு.முகமது உதுமான், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.05.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 32 வருடங்கள் 21 நாட்கள் (அ) 64 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3137/எ4/2008, நாள்.28.10.2008 சான்றின்படி 01.06.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.6,000/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,82,240/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2,000/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,51,040/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.அலிமுன்னிசா, அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.6,000/– 31.05.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 01.06.2015 முதல் ரூ.3,600/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.முகமது உதுமான், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்களுக்கு 01.06.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.6,000/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.2,82,240/–ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.70,560/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,11,680/– வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகள் நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.2000/– (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,51,040/– (ரூபாய் இரண்டு லட்சத்து ஐம்பத்தி ஓராயிரத்து நாற்பது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.6,000/–லிருந்து ரூ.4,000/– ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(து.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

பொ.து.ந.க.எண்.பி4/28734/2008
ஆணையாளர் அவர்களின் 15.11.2008 நாளிட்ட குறிப்பு

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :659/2008 பொருள் எண். 59

**ஓய்வூதியம்**

திரு.ஜி.அனந்தராகவன், உதவிசெயற்பொறியாளர், பாலங்கள் துறை, அவர்கள் வயது முதிர்வு அடைந்தமையால் பணியிலிருந்து 30.06.2004 பிற்பகல் முதல் ஓய்வு பெற்றார். துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை கடிதம் நி.மு.எண்.2679/எ4/2008, நாள். 22.08.2008ல் கீழ்கண்டவாறு ஓய்வூதியப் பயன்கள் வழங்க சான்றளிக்கப்பட்டுள்ளது.

| | ஓய்வூதிய பயன்கள் |
|---|---|
| வயது முதிர்வு திருத்திய ஓய்வூதியம் 01.07.2004 முதல் | ரூ.5238/— |
| இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடை | மாற்றம் இல்லை |
| தொகுப்பு | ரூ.1746/— |
| தொகுப்பு தொகை | ரூ.2,19,158/— |
| குடும்ப ஓய்வூதியம் | தகுதியான நபர் இல்லை |

தனியர் சென்னை மாநகராட்சி இரண்டாம் பிரிவு (வகுப்பு) அலுவலரானதால் மன்றத்தின் தீர்மானம் பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட திருத்திய ஓய்வூதிய பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு.ஜி.அனந்தராகவன், ஓய்வுபெற்ற உதவி செயற்பொறியாளர், பாலங்கள் துறை, அவர்களுக்கு தணிக்கை சான்றின்படி திருத்திய ஓய்வூதிய பயன்களாக வயது முதிர்வு ஓய்வூதியமாக ரூ.5238/—ஐ ஏற்கனவே, வழங்கப்பட்ட ஓய்வூதியமான ரூ.5142/—லிருந்து அதிகரித்து ஓய்வூதியம் வழங்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.1746/—ஐ தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,19,158/— (ரூபாய் இரண்டு லட்சத்து பத்தொன்பதாயிரத்து நூற்று ஐம்பத்தி எட்டு மட்டும்)ல் ஏற்கனவே, வழங்கப்பட்ட தொகை ரூ.2,15,142/—ஐ நேர்செய்து மீதம் ரூ.4016/— வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அன்னாருக்கு ஓய்வூதியம் ரூ.5238/—லிருந்து ரூ.3492/—ஆக குறைத்து வழங்கவும், நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ—18. மன்றச் செயலாளர்

<u>பொ.து.ந.க.எண்.பி4/36142/2008</u>
<u>ஆணையாளர் அவர்களின் 15.11.2008 நாளிட்ட குறிப்பு</u>

<u>30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்</u>

தீர்மான எண் :660/2008 பொருள் எண்.60

<u>ஓய்வூதியம்</u>

திரு.டி.டபிள்யூ.ஜெயகுமார் தனசிங், கூடுதல் வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்கள் பணியிலிருந்து 31.08.2008 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார். தனியர் 36 வருடங்கள் 01 மாதம் 17 நாட்கள் (அ) 66 அரை ஆண்டுகள் தகுதிப்பணி புரிந்தமையால், துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, நி.மு.எண்.3233/எ4/2008, நாள்.28.10.2008 சான்றின்படி 01.09.2008 முதல் வயது முதிர்வு ஓய்வூதியமாக மாதம் ரூ.9,000/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/– மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,000/– தொகுத்துப் பெறவும், அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,76,560/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

ஓய்வூதியரின் காலத்திற்குபின் அன்னாரது வாரிசுதாரர் மனைவி திருமதி.ரஜினி ஹெப்சிபா, அவர்கள் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,000/– 15.08.2015 வரையிலும், குறைக்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் 16.08.2015 முதல் ரூ. 5,400/– பெறவும் தகுதியுடையவராகிறார்.

மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல் சம்பந்தமாக துணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இவர் சென்னை மாநகராட்சி வகுப்பு–1ஆ அலுவலரானதால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே மேற்கண்ட ஓய்வூதியப் பயன்கள் வழங்கப்பட வேண்டும்.

ஆகையால், திரு.டி.டபிள்யூ.ஜெயகுமார் தனசிங், கூடுதல் வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, அவர்களுக்கு 01.09.2008 முதல் ஓய்வூதியமாக மாதம் ரூ.9,000/– இறப்பு மற்றும் ஓய்வுகாலப் பணிக்கொடையாக ரூ.3,50,000/–ல் தணிக்கைத் தடையின் காரணமாக 25 விழுக்காடு தொகையான ரூ.87,500/– பிடித்தம் செய்து மீத தொகையான ரூ.2,62,500/– (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்தி இரண்டாயிரத்து ஐநூறு மட்டும்) வழங்கவும், தனியரின் மீதுள்ள தணிக்கைத்தடைகளை நிவர்த்தி செய்தபின்பு பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்பட்ட 25 விழுக்காடு தொகையை விடுவிக்கவும், மற்றும் ஓய்வூதியத்திலிருந்து ரூ.3,000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) தொகுத்துப் பெறவும் அவ்வாறு தொகுத்துப் பெறும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,76,560/– (ரூபாய் மூன்று லட்சத்து ஏழுபத்தி ஆறாயிரத்து ஐநூற்று அறுபது மட்டும்) வழங்கவும், தொகுத்துப் பெறுவதால் அவரது ஓய்வூதியம் ரூ.9,000/–லிருந்து ரூ.6,000/–ஆக குறைத்து வழங்கவும், அன்னாரின் மனைவி திருமதி.ரஜினி ஹெப்சிபா, அவர்களுக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் ரூ.9,000/– 15.08.2015 முடியவும் ரூ. 5,400/– 16.08.2015 முதல் வழங்கவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/3291/2008
ஆணையாளர் அவர்களின் 26.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :661/2008 பொருள் எண். 61

## தேர்வுநிலை வழங்க அனுமதி

மாவட்ட குடும்ப நலத்துறையில் மருத்துவ அலுவலராக பணிபுரியும் டாக்டர். திருமதி. எஸ்.சரஸ்வதி, மருத்துவ அலுவலர் அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் பத்தாண்டு பணியை முடித்துள்ளார். அவருக்கு தேர்வு நிலை கால சம்பள ஊதியம் அனுமதிக்கப்பட வேண்டும்.

டாக்டர். திருமதி. எஸ்.சரஸ்வதி, மருத்துவ அலுவலராக 10.11.1989 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணி நியமனம் அரசாணை எண்.1460 நாள்.06.12.1993 மற்றும் 27.05.1994 நாளிட்ட மன்ற தீர்மான எண்.1517/94ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. தனியர் 10.11.1991 முதல் தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

கணக்கு அலுவலர், இந்திய மக்கள் தொகைத்திட்டம் அவர்கள் தனியருக்கு 10.11.1999 முதல் தேர்வு நிலை கால சம்பள விகிதம் அனுமதித்து அவரது அடிப்படை ஊதியத்தை ரூ.9925+300 சிறப்பு ஊதியம் என தேர்வு நிலை கால சம்பளம் ரூ.9100–275–14050ல் நிர்ணயிக்கலாம் என குறிப்புரை வழங்கியுள்ளார். மேலும் பணப்பயன் 24.02.2005 முதல் வழங்கப்படவேண்டும் என குறிப்பிட்டுள்ளார்கள்.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவில்லை. இவரது பணிக்காலத்தை பற்றிய விவரங்கள் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் 01 | மருத்துவ அலுவலரின் பெயர் 02 | முதன் முதலில் நியமன நாள் / பணிவரன் முறை செய்த நாள் 03 | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் 04 | சம்பளம் இல்லா விடுப்பு துய்த்த நாள் 05 | பத்தாண்டு பணியை முடித்த நாள் 06 |
|---|---|---|---|---|---|
| 01. | டாக்டர். திருமதி. எஸ்.சரஸ்வதி, மருத்துவ அலுவலர் | 10.11.1989 | 10.11.1991 | இல்லை | 09.11.1999 பிற்பகல் |

| பிந்தைய ஆண்டுகளில் தண்டனை வழங்கப்பட்ட விவரம் 07 | தண்டனை முற்று பெற்ற நாள் 08 | தேர்வு நிலை ஊதியம் பெற தகுதியுடையவரா 09 | தேர்வு நிலை வழங்கப்பட வேண்டிய நாள் 10 | தேர்வு நிலை காலஊதிய விகிதம் பணப்பயன் வழங்கப்பட வேண்டிய நாள். |
|---|---|---|---|---|
| ஏதுமில்லை | – – | ஆம் | 10.11.1999 | 24.02.2005 |

தனியருக்கு தேர்வு நிலை கால சம்பளம் வழங்குவதால் மருத்துவ அலுவலர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

எனவே, டாக்டர். திருமதி. எஸ்.சரஸ்வதி, மருத்துவ அலுவலர் பதவியில் 10 ஆண்டு பணியை 09.11.1999 அன்று பூர்த்தி செய்ததால் அவருக்கு 10.11.1999 முதல் அடிப்படை சம்பளம் ரூ. 9925+300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பளமான ரூ. 9100–275–14050ல் நிர்ணயிக்கவும் மற்றும் பணப்பயன் 24.02.2005 முதல் வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

"இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது"

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ1.ந.க.எண்.அ2/5410/08
ஆணையாளர் அவர்களின் 21.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :662/2008 பொருள் எண். 62

## தேர்வு நிலை வழங்க அனுமதி

சென்னை மாநகராட்சி, மண்டலம்–1, திரு.எஸ்.மோகன்ராஜ், செயற்பொறியாளர் அவர்கள் 11.09.2008 நாளிட்ட கடிதத்தில் தான் 02.01.1979ல் உதவி பொறியாளராக பணியில் அமர்த்தப்பபட்டதாகவும், 02.01.1989 முதல் தேர்வு நிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதம் வாங்கியதாகவும் 01.06.1991 முதல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று தொடர்ந்து உதவி செயற்பொறியாளராக கடந்த 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும் அரசாணைகளின்படி தான் தேர்வுநிலை உதவிபொறியாளர் பதவியில் 02.01.1989 முதல் 06.06.1991 வரை பணியாற்றிய காலத்தை, உதவி செயற்பொறியாளர் பதவியில் 07.06.1991 முதல் 01.01.99 வரை பணியாற்றிய காலத்துடன் சேர்த்து 10 ஆண்டுகளுக்கான தேர்வுநிலை உதவி செயற்பொறியாளருக்கான ஊதிய விகிதத்தை 02.01.1999 முதல் வழங்கவும் மற்றும் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் 02.01.1999 முதல் ஊதியம் நிர்ணயம் செய்து அதற்குண்டான நிலுவைத்தொகையை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்மந்ததாக சமர்ப்பித்துக்கொள்வது யாதெனில், திரு.எஸ்.மோகன்ராஜ், அவர்கள், உதவி பொறியாளராக 02.01.1979 முதல் சென்னை மாநகராட்சி பணியில் நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு உதவி பொறியாளர் பதவியில் 10 ஆண்டுகள் பணி முடிந்தவுடன் 02.01.1989 முதல் தேர்வு நிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதம் ரூ.2200–75–2800–100–4000 வழங்கப்பட்டு இவ்வூதிய விகிதத்தில் ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிறகு தனியர் உதவி செயற்பொறியாளராக சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/14931/93, நாள் 14.5.1993 ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய விகித்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவர் 16.04.1993 முற்பகல் முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்தார். தனியரின் தற்காலிக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந3) துறை, நாள் 31.03.2001ல் 07.06.1991 முதல் உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையின் அடிப்படையில் தனியரின் தற்காலிக பணிஉயர்வினை 07.06.1991 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் வரன்முறை செய்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36102/1998 நாள் 17.08.2002 மூலம் ஆணை வழங்கப்பட்டது.

அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் தேர்வுநிலை கீழ்நிலை பதவியின் ஊதிய விகதமும் (Selection Grade Scale of pay of Substantive post) உயர் பதவியின் சாதாரண நிலையின் ஊதிய விகிதமும் (Ordinary Grade Scale of pay of officiating Post) ஒரே விகித நிலையில் (Identical Scale of pay) இருந்தால் தேர்வுநிலை கீழ்நிலை பதவியில் பணியாற்றிய காலத்தை உயர் பதவியில் பணியாற்றிய காலத்தோடு சேர்த்து 10 ஆண்டுகள் கணக்கிட்டு உயர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் தனியரின் பணிக்காலத்தில் ஒருமுறை வழங்கலாம் என அரசு ஆணை வழங்கியுள்ளது. இவ்வரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி ஐந்தாவது ஊதியக்குழு மற்றும் தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 1998ன்படி தேர்வுநிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதமும் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதமும் (அதாவது) ரூ.2200–75–2800–100–4000 மற்றும் ரூ.8000–275–13500 என்ற ஒரே விகித நிலையில் (Identical Scale of pay) இருப்பதால் திரு.எஸ்.மோகன்ராஜ் அவர்கள் கீழ்நிலை பதவியான தேர்வுநிலை உதவிப்பொறியாளர் பதவியில் 02.01.1989 முதல் 06.06.1991 வரை பணியாற்றிய 2 வருடம் 5 மாதம் 05 நாட்களை, உயர் பதவியான சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவியில் 7 வருடம் 06 மாதம்25 நாட்களுடன் சேர்த்து 10 வருடங்கள் கணக்கிட்டு தனியருக்கு 02.01.1999 முதல் தேர்வு நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதம் வழங்கவேண்டும். மேற்கண்ட காலத்தில் தனியர் எந்தவிதமான சம்பளமில்லா விடுப்பும் துய்க்கவில்லை. ஆகையால், இவருக்கு 02.01.1999 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் அரசாணை (நிலை) எண்.162 நிதி (ச.கு.) துறை, நாள்.13.04.1998ன்படி ரூ.9100–275–14050ஐ வழங்கலாம்.

மேலும், உதவி செயற்பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியாளர்கள் துணை விதிகளின்படி இரண்டாம் நிலை (Class – II)ன் கீழ் வருவதால் திரு.மோகன்ராஜ் அவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலுடன் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதம் வழங்கப்படவேண்டும்.

<u>ம.அ1.ந.க.எண்.அ2/5410/08</u>

திரு.எஸ்.மோகன்ராஜ் அவர்கள் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.8000–275–13500)யில் ரூ.10,200/–ஐ அடிப்படை ஊதியமாக 02.01.1999 அன்று பெற்றுள்ளார். இவருக்கு நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி சதாரண நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு அளித்து இவருடைய அடிப்படை ஊதியத்தை ரூ.10,475/– என தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ஐ 02.01.1999 முதல் நிர்ணயம் செய்ய வேண்டும்.

திரு.எஸ்.மோகன்ராஜ், செயற்பொறியாளர், மண்டலம்–1, என்பவருக்கு தேர்வுநிலை உதவி பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்துடன் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்தை சேர்த்து 02.01.1999 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100–275–14050ஐ அரசாணை(நிலை) எண்.210 பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்த துறை நாள்.11.03.1987 மற்றும் அரசு கடித எண்.168 ப.ம.நி.சீ.துறை நாள்.28.09.1999ன்படி வழங்கவும் மற்றும் தனியருடைய அடிப்படை ஊதியம் ரூ.10,475/– என்று தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகதம் ரூ.9100–275–14050ல் 02.01.1999 முதல் நிர்ணயம் செய்து அதற்குண்டான நிலுவைத்தொகையை வழங்கவும், மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18.

மன்றச் செயலாளர்

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :663/2008 பொருள் எண். 63

**சிறப்பு நிலை வழங்க அனுமதி**

ஆணையாளர் அவர்களின் 27.02.2006 நாளிட்ட செயல்முறை ஆணைப்படி மருத்துவர் திரு.ஆர்.ரவிச்சந்திரன், அவர்கள் மருத்துவ அலுவலராக 1340–75–1715–90–2435 என்ற ஊதிய விகிதத்தில் அரசு ஆணை எண்.ப்பிஇ/1635/81, வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலமாக சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் 15.03.1986 பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

ஆணையாளர் சென்னை மாநகராட்சி அவர்களது செயல்முறை ஆணையின்படி தனியர் பதவியில் அமர்த்தப்பட்ட நாளான 15.03.1986 முதல் பணிவரன் முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தனியரின் 12.06.2003 நாளிட்ட கடிதத்தில், தான் ஒரே பதவியில் இருபது வருடங்கள் தொடர்ந்து பணியாற்றியமைக்கு தனக்கு மருத்துவ அலுவலர் பதவியில் சிறப்பு நிலை ஊதிய விகிதம் வழங்கும்படி கோரியுள்ளார்.

திரு.ஆர்.ரவிச்சந்திரன், மருத்துவ அலுவலர், சென்னை மாநகராட்சி, ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை எண்.ம.அ7.சு.து.ந.க.எண்.எச்1/9388/2000, நாள்.21.12.2004 மற்றும் மாமன்ற அனுமதி எண்.431/2004, நாள்.25.11.2004ன்படி அன்னாருக்கு தேர்வுநிலை ஊதியம் ரூ.9100/– என்று ரூ.9100–275–14050 என்ற ஊதிய விகிதத்தில் 15.03.1996 முதல் வழங்கப்பட்டுள்ளது.

தனியர் 15.03.1996 முதல் இன்றைய தேதி வரை ஊதியம் இல்லா விடுப்பு ஏதுவும் துய்க்கவில்லை. எனவே, சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000–325–15200 என்ற விகிதத்தில் ஊதியம் பெற தகுதியுடையவராகிறார். மேற்படி மருத்துவ அலுவலருக்கு சிறப்பு நிலை ஊதியம் வழங்குவதால் அனுமதிக்கப்பட்ட மருத்துவ அலுவலர்களின் எண்ணிக்கை கூடுதல் ஏதும் இல்லை.

தனியர் மீது விசாரணைகளோ, குற்றங்களோ ஏதும் நிலுவையில் இல்லை. வகுப்பு இரண்டின் கீழ் வரும் மருத்துவ அலுவலர் பதவிக்கு சிறப்பு நிலை காலஊதிய விகிதம் வழங்க அரசு ஆணை எண்.1381 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள்.08.09.1982ன்படி மாமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, திரு.ஆர்.ரவிச்சந்திரன், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை, மண்டலம்–7, அவர்களுக்கு மருத்துவர் அலுவலர் பதவியில் சிறப்பு நிலை ஊதிய விகிதமான ரூ.10000 –325–15200 (ஆறாவது ஊதியக் குழுவின் ஊதிய நிலை)ன்படி 15.03.2006 முதல் ரூ.11950+175 பி.பி. அடிப்படை ஊதியமாக வழங்க நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.7.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/556/2007
ஆணையாளர் அவர்களின் 21.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :664/2008 பொருள் எண்.64

பணிவரன்முறைப்படுத்த அனுமதி

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் டாக்டர்.திருமதி.கே.திவ்யசுந்தரி, மற்றும் டாக்டர்.திருமதி.கே.விஜயா, ஆகிய இருவருக்கும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு ரூ.10000–325–15200 என்ற காலமுறை சம்பள விகிதம் மற்றும் இதர படிகளுடன் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களாக பதவி உயர்வு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி 28.05.2007 நாளிட்ட தீர்மான எண்.205/07ல் வழங்கியது. டாக்டர். திருமதி.கே.திவ்யசுந்தரி, அவர்கள் 18.09.2007 அன்றும் டாக்டர் திருமதி.கே.விஜயா, அவர்கள் 05.12.2007 அன்றும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பதவியேற்றனர்.

அரசாணை (ப) எண்.836 நகராட்சி நிர்வாகம் (மா.ந3) குடிநீர் வழங்கல் துறை நாள்.06.08.2008ல் டாக்டர்.திருமதி.கே.திவ்யசுந்தரி, மற்றும் டாக்டர்.திருமதி.கே.விஜயா, ஆகிய இருவருக்கும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர்களாக பதவி உயர்வு அளித்து ரூ.10000–325–15200 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் இதர படிகளுடன் முறையே 18.09.2007 மற்றும் 05.12.2007 முற்பகல் பணி நியமனம் செய்யப்பட்டதற்கு அரசின் உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து இவ்விரண்டு அலுவலர்களுக்கு மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்ய மன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

எனவே, டாக்டர்.திருமதி.கே.திவ்யசுந்தரி, மற்றும் டாக்டர்.திருமதி.கே.விஜயா, ஆகிய இருவருக்கும் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் பதவியில் முறையே பணியில் சேர்ந்த நாளான 18.09.2007 மற்றும் 05.12.2007 முதல் பணி வரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :665/2008 பொருள் எண். 65

**பணிவரன்முறைப்படுத்த அனுமதி**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்பநலத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட 48 மருத்துவ அலுவலர்களில் 32 மருத்துவ அலுவலர்கள் ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்வதற்கு மன்ற தீர்மானம் பெறப்பட்டது. (மன்ற தீர்மான எண். 458/2007 நாள்.31.08.2007)

03.10.2007 தேதியிட்ட ஆணையரது செயல்முறை ஆணைப்படி 32 மருத்துவ அலுவலர்கள் ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்றும் இதரபடிகளுடன் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது.

அரசாணை(ப)எண்.320 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.25.07.2008ன்படி ஒப்பந்த அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட 32 மருத்துவ அலுவலர்களை ரூ.8000–275–13500 என்ற காலமுறை ஊதிய விகிதம் மற்ற இதர படிகளுடன் அவரவர் பணியில் சேர்ந்த நாள் முதல் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு.

| வ.எண் | மருத்துவ அலுவலரின் பெயர் | பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| 01 | டாக்டர் திருமதி.ஜெயலட்சுமி பாலாஜி | 06.10.2007 |
| 02 | டாக்டர் திருமதி.அங்காளீஸ்வரி | 06.10.2007 |
| 03 | டாக்டர் திருமதி.எஸ்.துளசி | 06.10.2007 |
| 04 | டாக்டர் திருமதி.செந்தாமரை செல்வி | 06.10.2007 |
| 05 | டாக்டர் திருமதி.சுதா | 06.10.2007 |
| 06 | டாக்டர் திருமதி.ஆர்.மலர் | 06.10.2007 |
| 07 | டாக்டர் திருமதி.ஜே.பிரின்சி | 06.10.2007 |
| 08 | டாக்டர் திருமதி.ஜே.மும்தாஜ் | 06.10.2007 |
| 09 | டாக்டர் திருமதி. கீதா யுவராஜ் | 06.10.2007 |
| 10 | டாக்டர் திருமதி.ஆர். தனலட்சுமி | 06.10.2007 |
| 11 | டாக்டர் திருமதி.எஸ்.கிருத்திகா | 06.10.2007 |
| 12 | டாக்டர் திருமதி.டி.லிடியா | 06.10.2007 |
| 13 | டாக்டர் திருமதி.சாய்சுதா | 06.10.2007 |
| 14 | டாக்டர் திருமதி.ஜி.ஹேமமாலினி | 06.10.2007 |
| 15 | டாக்டர் திருமதி.ஷீலா சேகர் | 06.10.2007 |
| 16 | டாக்டர் திருமதி.வி.மாலதி | 06.10.2007 |
| 17 | டாக்டர் திருமதி.எஸ்.மாலதி | 06.10.2007 |
| 18 | டாக்டர் திருமதி.ஜே.கயல்விழி | 06.10.2007 |
| 19 | டாக்டர் திருமதி.ஏ.தென்றல் | 06.10.2007 |
| 20 | டாக்டர் திருமதி.சி.டி.சாந்தி | 06.10.2007 |
| 21 | டாக்டர் திருமதி.எஸ்.மீனாட்சி | 06.10.2007 |
| 22 | டாக்டர் திருமதி.ஏ.எஸ்.ராணி பாண்டியன் | 06.10.2007 |
| 23 | டாக்டர் திருமதி.பி.கற்பகவள்ளி | 06.10.2007 |

<u>மா.கு.ந.(ம) ம.கு.ந.எண்.எப்4/3575/1999</u>

| | | |
|---|---|---|
| 24 | டாக்டர் திருமதி. ஸ்ரீலட்சுமி | 06.10.2007 |
| 25 | டாக்டர் திருமதி.பி.வசந்தி | 06.10.2007 |
| 26 | டாக்டர் திருமதி.கே.சுஜாதா | 06.10.2007 |
| 27 | டாக்டர் திருமதி.டி.விந்தியா | 06.10.2007 |
| 28 | டாக்டர் திருமதி.சி.ரத்னலதா | 06.10.2007 |
| 29 | டாக்டர் திருமதி.கெட்ஸி சுவர்ணா | 06.10.2007 |
| 30 | டாக்டர் திருமதி.ஜெபகனி கிறிஸ்டில்லா | 06.10.2007 |
| 31 | டாக்டர் திருமதி.சாந்தி விவேகானந்த் | 06.10.2007 |
| 32 | டாக்டர் திருமதி.கே.பங்கஜம் | 06.10.2007 |

மேற்படி அரசாணையினை தொடர்ந்து பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி அவரவர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:மா.கு.ந.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(த.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

ம.அ1.ந.க.எண்.அ6/904/2001

ஆணையாளர் அவர்களின் 07.11.2008 நாளிட்ட குறிப்பு

30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்

தீர்மான எண் :666/2008 பொருள் எண். 66

பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்துதல்

திருமதி. பி. நரசம்மா, துப்புரவு பணியாளர், வார்டு –4, பகுதி –2, மண்டலம் –1, என்பவர் கடந்த 02.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காரணத்திற்காக, தனியரின் விளக்கம் கோரி குறிப்பாணை வழங்கப்பட்டும், விளக்கம் அளிக்காததால் சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ம் நிலைப் பணியாளர்கள் ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு துணை விதி எண். 9(1)ன் கீழ் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட்டது. இதற்கும் தனியர் விளக்கம் அளிக்காததால் 9 (1)ன் கீழ் வழங்கப்பட்ட குற்றக் குறிப்பாணை விலக்கப்பட்டு, 9 (2) விதியின் கீழ் வழங்கப்பட்டது.

1) கடந்த 02.05.2001 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.
2) பணிக்கு வராமை குறித்து எவ்வித தகவலும் இதுநாள் வரை அளிக்கவில்லை
3) முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததால், கோட்ட துப்புரவு பணிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்துதல்

மேற்கண்ட குற்றச் சாட்டிற்கு தனியர் 25.07.2003 நாளிட்ட விளக்க கடிதத்தில், தனக்கு மஞ்சள் காமாலை நோய் பாதித்ததன் காரணமாக ஆந்திரா சென்று நாட்டு மருந்து சாப்பிட்டதால், கடந்த 02.05.2001 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை எனவும், ஆந்திரா வந்து செல்வதற்கு யாருமில்லாத காரணத்தால், உடனடியாக தகவல் தெரிவிக்க இயலவில்லை எனவும், துப்புரவு பணி பாதித்தமைக்கு வருந்துவதாகவும், மன்னித்து சம்பளமில்லா விடுப்பு தந்து மீண்டும் பணிக்கு எடுத்துக் கொள்ளும்படியும் கோரியுள்ளார்.

இதனடிப்படையில், ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் வைத்து 11.08.2003 முதல் மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டார். இந்நிகழ்வின் தொடராக விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, விசாரணை அறிக்கை பெறப்பட்டது. விசாரணை அலுவலர் தம் அறிக்கையில், 2 வருடகாலம் பணிக்கு வராமல் இருந்த போது, தகவல் முறையாக தெரியப்படுத்தவில்லை எனவும், ஆந்திரா சென்றுவிட்ட காரணத்தால், தகவல் அனுப்ப முடியவில்லை என்று கூறுவது ஏற்றுக் கொள்ளும்படி இல்லை எனவும், பணிக்கு வராதது தவறு என குற்றங்களை ஒப்புக் கொண்டுள்ளதால், தனியர் மீதான மூன்று குற்றச் சாட்டுகளும் நிரூபணமாகிறது என தெரிவித்துள்ளார்.

விசாரணை அறிக்கை தனியருக்கு சார்வு செய்யப்பட்டது. கூடுதல் விளக்கம் ஏதும் அளிக்கவில்லை. இவர் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் இறுதி ஆணையாக, தனியரின் ஊதிய உயர்வு இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தம் செய்தும், தனியர் பணிக்கு வராத காலமான 02.05.2001 முதல் 10.08.2003 வரையிலான காலம் ஒரு வருடத்திற்கு மேற்பட்டுள்ள நிலையில், அடிப்படை விதி 18(2) ஐ தளர்த்தி அரசு தளர்வாணை பெற்றுபின் வரன்முறைப்படுத்தப்படும் என இணை ஆணையர் ( பணிகள்) அவர்களின் செயல்முறை ஆணைப்படி 02.07.2004 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

தனியர் 30.06.2005 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டு அன்னாருக்கு 07.10.2005 முதல் தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. தனியர் ஓய்வு கால பணிப்பயன்களை பெற்றளிக்க கோரியதன் அடிப்படையில், பொது வைப்பு நிதி, சிறப்பு சேம நலநிதி, ஈட்டிய விடுப்பு மற்றும் தனிப்பட்ட அலுவலர் விடுப்பு தொகை மற்றும் 6 வது ஊதியக் குழு 1வது மற்றும் 2வது தவணை பெற்று வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இக்கோப்பு அரசு தளர்வாணை பெற அனுப்புவது காலதாமதம் ஆனது. பகுதி–2ல் இருந்து தனியரின் கோப்பு மற்றும் பணிப்பதிவேடு 25.01.2008 அன்று மண்டலத்திற்கு பணிப்பயன்கள் பெற்று தந்தபின் அனுப்பப்பட்டுள்ளது.

தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 02.05.2001 முதல் 10.08.2003 வரை ஓராண்டினைக் கடந்துள்ளதால் வரன்முறைப்படுத்த அடிப்படை விதி 18(2)னை தளர்வு செய்து அரசாணை பெற்ற பின்பே அன்னாருக்கு முழு ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்க இயலும். எனவே, மேற்கண்ட பணிக்கு வராத காலத்தை வரன்முறைப்படுத்த அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”
//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:ம.அ.1.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ–18. மன்றச் செயலாளர்

**பொ.து.ந.க.எண்.இ8/20600/2008**
**ஆணையாளர் அவர்களின் 12.12.2008 நாளிட்ட குறிப்பு**

**30.12.2008 அன்று நடந்த மன்றத்தின் சாதாரண கூட்டத்தின் நடவடிக்கையின் சுருக்கம்**

தீர்மான எண் :667/2008 பொருள் எண். 67

**பண்டக காப்பாளர் பதவிக்கு துணை விதி திருத்தம்**

பண்டக காப்பாளர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் பிரிவு 3ன் கீழ் வருகிறது இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ. 5300–150–8300 ஆகும் சென்னை மாநகராட்சி 3 ஆம் (மற்றும்) 4 ஆம் நிலை சார்நிலை பணியாளர் வரைவு துணை விதிகள்1983ன்படி இப்பதவிக்குரிய கல்வித்தகுதி மற்றும் நியமன முறைகள் பின்வருமாறு அமைகிறது.

இப்பதவிக்குரிய ஊட்டப்பதவிகள்

1. உதவி பண்டக காப்பாளர் பதவியிலிருந்து பதவி உயர்வு மூலம்
2. பணிமாறுதல் அடிப்படையில், தேர்வு நிலை **பெயிலிப் மற்றும்** தேர்வு நிலை சார்ஜெண்ட் மூலம்

இப்பதவிக்கு வரையறுக்கப்பட்ட கல்வித்தகுதி

1. பள்ளி இறுதி வகுப்பில் தேர்ச்சி
2. சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பாகம் – 1 மற்றும் 2ல் தேர்ச்சி

தற்போது உதவி பண்டக காப்பாளர், தேர்வுநிலை பெயிலிப் மற்றும் தேர்வு நிலை சார்ஜண்ட் பதவிகளில் தகுதியுள்ள நபர்கள் எவரும் இல்லாத காரணத்தால் பல ஆண்டுகளாக பண்டக காப்பாளர் பதவி நிரப்பப்படாமலேயே உள்ளது. இதனால் பணிகள் தேக்கம் அடைந்துள்ளதால் தற்போது உதவியாளர்களே தற்காலிகமாக பண்டக காப்பாளர்களாக பொறுப்பு வகிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பல்வேறு துறைகளைச் சார்ந்த பண்டக சாலைகளில் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள பண்டக காப்பாளர் பணியிடங்கள் மொத்தம் 15 இவற்றில் தற்போது 8 பணியிடங்கள் 50 விழுக்காடுக்கும் அதிகமாக நிரப்பப்படாமல் உள்ளது.

பண்டக காப்பாளர் பதவி உதவி பண்டக காப்பாளர் பதவியில் இருப்போரை கொண்டு நிரப்பப்பட வேண்டும். ஆனால், 09.04.1997 நாளிட்ட நியமனக்குழு தீர்மான எண். 6/97ன்படி தகுதியுள்ள நபர்கள் எவரும் உதவி பண்டக காப்பாளர் பதவியில் இல்லாத காரணத்தால் இது வரை பின்பற்றப்பட்ட அமைந்த விதிமுறைகளின் படி இப்பதவியின் ஒத்த ஊதிய விகிதத்தில் (ரூ.4000–100–6000) உள்ள தகுதி வாய்ந்த உதவியாளர் பதவியில் இருந்து அவர்களின் விருப்பத்தின் பெயரில் நிரப்புவதற்காக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இதன் அடிப்படையில் உதவியாளர்களை கொண்டு பண்டக காப்பாளர் காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளது.

02.11.1999 நாளிட்ட நியமனக்குழு தீர்மான எண்.597/99ன்படி உதவி பணப்பொறுப்பாளர்கள் பதவியில் பணியாற்றுபவர்களுக்கு பிரிவு மேலாளர், உரிமம் ஆய்வாளர் போன்ற பதவிகளில் பதவி உயர்வு வழங்க நிர்வாக ரீதியாக விதிகளின் படி இயலாத நிலை உள்ளதால் இவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் மேலாளர் பதவிக்கு இணையான பண்டக காப்பாளர் பதவிக்கு விருப்பம் தெரிவிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு நியமனக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட உதவியாளர் மற்றும் உதவி பணப்பொறுப்பாளர் பதவிகளில் பண்டக காப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவிகளாக சேர்க்கவும் இத்திருத்தத்தை வரைவு துணை விதிகளில் மேற்கொள்ளவும் இதற்கு முன்னர் உதவியாளர் பதவியில் இருந்து பண்டக காப்பாளர்களாக பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு மற்றும் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு இனிவரும் காலங்களில் 1 உதவி பண்டக காப்பாளர் 1 உதவியாளர் 1 உதவி பணப் பொறுப்பாளர் என்ற விகிதாச்சாரத்தில் பண்டக காப்பாளர் பதவியை நிரப்பவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். இவ்விகிதாச்சாரத்தில் பணியாளர்கள் இல்லாத நிலையில் அடுத்த பதவியில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு அளிக்கலாம்.

உதவியாளர்கள், உதவிப் பணப் பொறுப்பாளர்கள் மற்றும் தொகுப்பாளர் மற்றும் எழுத்தர் பதவியிலுள்ளோர் பண்டகக் காப்பாளர் பதவிக்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இதனடிப்படையிலும் பண்டக காப்பாளர் காலிப் பணியிடங்களை நிரப்பவேண்டியிருப்பதாலும் சென்னை மாநகராட்சி 3 ஆம் (ம) 4 ஆம் நிலை சார்நிலை பணியாளர் வரைவு துணை விதிகள் 1983ல் கீழ்கண்ட மாற்றங்கள் வேண்டப்படுகிறது.

அ) ஏற்கனவே இருக்கும் ஊட்டப்பதவியான உதவி பண்டக காப்பாளர் பதவியுடன் விருப்பம் தெரிவிக்கும் உதவியாளர், மற்றும் உதவி பணப் பொறுப்பாளர்களை பண்டக காப்பாளர் பதவிக்குரிய ஊட்டப்பதவிகளாக சேர்க்கவும்.

ஆ) இப்பதவிக்கு 1 உதவி பண்டக காப்பாளர் 1 உதவியாளர் 1 உதவி பணப்பொறுப்பாளர் என்ற விகிதாச்சாரத்தில் பண்டக காப்பாளர் தெரிவுப் பட்டியலை தயாரிக்கவும். இவ்விகிதாச்சாரத்தில் பணியாளர்கள் இல்லாத நிலையில் அடுத்த பதவியில் உள்ளவர்களுக்கு வாய்ப்பளிக்கலாம்.

இ) ஏற்கனவே வரைவு துணை விதிகளில் பண்டக காப்பாளர் பதவிக்கு தேர்வு நிலை பெய்லிப் (Bailiff) மற்றும் தேர்வு நிலை சார்ஜென்ட் (Sergeant) பதவிகள் ஊட்டப்பதவிகளாக சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது சென்னை மாநகராட்சி பணியில் பெய்லிப் (Bailiff) பதவியில் எவரும் பணியாற்றவில்லை, மேலும் அப்பதவி தற்போது அவசியமின்மை காரணமாக சென்னை மாநகராட்சியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. சார்ஜன்ட் பதவி, முன்னாள் இராணுவ பணியில் இருந்து ஓய்வு பெற்றவர்களைக் (Exservice Men) கொண்டு நிரப்பப்பட்டது. ஆனால் தற்போது விழிப்பு குழுமத்தில் பணிபுரிபவர்களைக் கொண்டு சார்ஜன்ட் பணியை நடத்தப்பட்டு வருவதால் சார்ஜன்ட் பதவிக்கு நியமனம் செய்வது நிறுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் பண்டக காப்பாளர் பதவிக்கு பெய்லிப் (Bailiff) மற்றும் சார்ஜன்ட் பதவிகளை ஊட்டப்பதவிகளாக இனியும் கருதாமல் அவ்விரு பதவிகளை பண்டக காப்பாளர் பதவிக்கு ஊட்டப்பதவிகள் என்ற நிலையிலிருந்து நீக்கம் செய்யவும் அத்திருத்தத்தை வரைவு துணை விதிகளில் மேற்கொள்ளவும் அவசியமாகின்றபடியால் மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்படவேண்டும். மாமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்ட பின்பு இனி பண்டக காப்பாளர் பதவிக்கு எதிர்காலத்தில் நிர்வாகத்தில் சிக்கல்கள் ஏற்படாவண்ணம் பதவி உயர்வின் மூலம் பண்டக காப்பாளர் பதவியின் காலிப்பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க இயலும்.

ஈ) முன்னதாக ஊட்டப்பதவி இல்லாத உதவியாளர் பதவியில் இருந்து பண்டக காப்பாளர் பதவி உயர்வு அளித்ததற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, இனம் "அ" " ஆ" " இ" மற்றும் ''ஈ'' ஆகியவைகளுக்கு மன்றத்தின் ஒப்புதல் நியமன குழு மூலமாக வேண்டப்படுகிறது.

''இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''எதிர்கட்சித் தலைவர் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் மாவட்ட குடும்ப நலத்துறையில் உள்ள தொகுப்பாளர் மற்றும் எழுத்தாளர் பதவிகளில் உள்ளவர்களையும் பதவி உயர்வில் சேர்ப்பது குறித்து நியமனக்குழு மூலம் ஆய்வு செய்து அடுத்த கூட்டத்தில் வைக்கலாம் என்று மன்றம் தீர்மானிக்கின்றது''.

//உண்மைச் சுருக்கம்//

கோப்பு:பொ.து.
நகல்: நி.ஆ.,த.பி & மு.க.(கு.1) அ.,செ-18. மன்றச் செயலாளர்